செ.வெ.எண்:667 நாள் 16.10.07

]

# பட்டு வளர்ச்சி துறையின்கீழ் புதியதாக பட்டு நூற்பு மையங்களை துவங்க ஊக்குவிக்கவேண்டும்

## ஆய்வில் அமைச்சர் பொங்கலூர் நா.பழனிசாமி அறிவுரை

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் தமது கட்டுப்பாட்டில் செயல்படும் துறைகளின் செயற்பாடுகளை ஆய்வு செய்து வருவதன் தொடர்ச்சியாக இன்று (16.10.2007) தலைலமைச் செயலகத்தில் பட்டு வளர்ச்சித் துறை மற்றும் தமிழ்நாடு கைத்ததிறத் தொழில்கள் வளர்ச்சி கழகத்தின் பணிகள் மற்றும் சட்டமன்ற அறிவிப்புகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து ஆய்வு செய்தார்.

ஆய்வில் நடப்பு ஆண்டில் பட்டு வளர்ச்சித் தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு சேரவேண்டிய உதவிகளை காலம் தாழ்த்தாமல் உடனடியாக கிடைக்கச் செய்யவேண்டும் எனவும் இது தொடர்பாக மத்திய பட்டு வாரியத்திடம் பெறவேண்டிய மான்ய தொகையை விரைந்து பெறவேண்டும் எனவும், பட்டுக்கூடு மற்றும் பட்டுநூலுக்கு அவற்றின் தரத்திற்கேற்ப நல்ல விலை கிடைப்பதற்கும் ஆவன செய்திட அதிகாரிகளை வலியுறுத்தினார்கள். நடப்பு ஆண்டில் அரசின் மான்ய திட்டத்தின்கீழ் அதிகபடியான பயன்களை ஒரு சில

விவசாயிகளுக்கு மட்டுமே வழங்குவதை தவிர்த்து, திட்டத்தின் தன்மைக்கேற்ப பலதரப்பட்ட விவசாயிகளும் பயன்படும்வகையில் சுமார் 10,000 விவசாயிகளுக்கு குறையாமல் அரசு திட்ட உதவிகள் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய அமைச்சர் அறிவுறுத்தினார். நடப்பு ஆண்டில் பட்டு நூற்பு நிலையங்களை அதிகரிக்கும் வகையில் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டம் மூலம் பயனாளிகள் தெரிவு செய்து பட்டு நூற்பு மையம் அமைக்க மாவட்ட தொழில் மைய அலுவலர்களுடன் இணைந்து விரைந்து நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொண்டார். இவ்வாண்டு 10,000 ஏக்கருக்கு குறையாத அளவு மல்பரி சாகுபடி செய்யப்படவேண்டும் என அறிவுரை வழங்கினார்.

பட்டு விவசாயிகளுக்கு தரமான முட்டைத் தொகுதிகள் கிடைக்கவும், கிருமிநாசினிகள் மற்றும் மருந்துப் பொருட்கள் தட்டுப்பாடின்றி கிடைக்கவும் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள அஅவலர்களை அறிவுறுத்தினார்கள்.

பூம்புகார் நிறுவனத்தை பொருத்தவரை மாமல்லபுரத்திலும், கன்னியாகுமரியிலும் அமைக்கப்பட உள்ள நிரந்தர கண்காட்சி அமைப்பு பணிகளின் மேல் உடனடியாக நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொண்டார். இது மட்டுமின்றி சென்னையில் பூம்புகார் அருங்காட்சியம் அமைக்கவும் உடன் நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொண்டார்.

தஞ்சாவூர் சுவாமிமலை மற்றும் கோவையிலும் பொது வசதி மையத்தினை உடனடியாக அமைக்க நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொண்டார்.

தமிழகத்தில் உள்ள கைவினைஞர் அனைவரையும் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அறிவித்துள்ள கைவினைஞர் நல வாரியத்தில் உறுப்பினராக்க நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொண்டார்.

கூட்டத்தில் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை செயலாளர் திரு விஸ்வநாத் ஷகோங்கர், இ.ஆ.ப., பட்டு வளர்ச்சித் துறை ஆணையர் திரு ஹன்மந்தர்சிங், இ.ஆ.ப., இணை இயக்குநர் திரு தானுப்பிள்ளை மற்றும் டான்சில்க் நிர்வாக இயக்குநர் திரு முத்தையா / பூம்புகார் மேலாண்மை இயக்குனர் திரு மேத்யூ, இ.ஆ.ப. மற்றும் பொது மேலாளர் திரு கோபாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

16/10/07

Addl. Senior Personal Assistant to
Minister for Rural Industries
Secretariat, Chennai-600 009

வெளியீடு, இயக்குநர்,
செய்தி மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.